உங்கள் அபிமான தினதமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்! கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 26.08.2026 • மலர் 04 • இதழ்: 238 • புதன் • Edition : Nagercoil • 26.08.2026 • Vol : 04 • Issue : 238 • Page : 4 • Rs. 5/-

# பிஹாரில் மாணவர் போராட்டம் தீவிரம்

## 'மக்கள் மாளிகை' முற்றுகை முயற்சியால் பதற்றம்



பாட்னா: 70வது பிஹார் அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தேர்வுகளை ரத்து செய்ய வலியுறுத்தி தலைநகர் பாட்னாவில் மாணவர்கள் போராட்டம் தீவிரமடைந்துள்ளது. மக்கள் மாளிகையை நோக்கி அவர்கள் நடத்திய பேரணியின்போது போலீஸார் அவர்களை தடுத்து நிறுத்தியதால் பதற்றமான சூழல் உருவானது.

நீட் தேர்வு வினாத்தாள் கசிவைக் கண்டித்து கரப்பான்பூச்சி ஜனதா கட்சி சார்பில் டெல்லியில் தொடர் போராட்டம் நடைபெற்றது. இது நாடு முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இந்தப் போராட்டம் காரணமாக மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் தனது பதவியை ராஜினமா செய்தார்.

இதன் தொடர்ச்சியாக, ஜார்க்கண்ட் அரசுப் பணியாளர் தேர்வாணையம் (ஜேபிஎஸ்சி) சார்பில் நடத்தப்பட்ட சிவில் சர்வீஸ் முதல்நிலைத் தேர்வு, ஜேஎஸ்எஸ்சி நடத்திய போட்டித் தேர்வு ஆகியவற்றில் முறைகேடுகள் நடைபெற்றதாகக் குற்றம் சாட்டி மாணவர்கள் தொடர் போராட்டங்களை நடத்தினர். இதையடுத்து, இரு அமைப்புகளும் நடத்திய 22 போட்டித் தேர்வுகளை ஜார்க்கண்ட் அரசு கடந்த 17ம் தேதி ரத்து செய்தது. பின்னர், அந்த உத்தரவுக்கு நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்தது.

இந்நிலையில், மற்றொரு மாணவர் போராட்டம் பிஹாரில் நடைபெற்று வருகிறது. 70வது பிஹார் அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் (பிபிஎஸ்சி) தேர்வுகளை ரத்து செய்ய வலியுறுத்தி தலைநகர் பாட்னாவில் மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். 70வது பிபிஎஸ்சி தேர்வுக்கான வினாத்தாள் முன்கூட்டியே கசிந்ததாகவும், இதில் முறகேடுகள் நடந்துள்ளதாகவும் குற்றம்சாட்டும் மாணவர்கள், இந்த தேர்வை அரசு ரத்து செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றனர்.

மேலும், பிபிஎஸ்சி ஆசிரியர் ஆட்சேர்ப்புத் தேர்வை ஒரே கட்டமாக நடத்த வேண்டும், தவறான பதில்களுக்கு மதிப்பெண்கள் குறைக்கப்படும் முறையை நீக்க வேண்டும், பிபிஎஸ்சி இடைநிலை தேர்வுகளுக்கான தேதியை அறிவிக்க வேண்டும் ஆகிய கோரிக்கைகளையும் அவர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

தங்கள் கோரிக்கையை நிறைவேற்ற அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் நோக்கில், பாட்னாவின் காந்தி மைதானத்தில் இருந்து ஆளுநர் மாளிகையை நோக்கி அவர்கள் பேரணியாகச் சென்றனர். அவர்கள் 'டாக் பங்களா' சந்திப்பை அடைந்தபோது அவர்களில் பலரை போலீஸார் கைது செய்தனர்.

அப்போது போராட்டக்காரர்களுக்கும் போலீசாருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. போராட்டக்காரர்களைக் கலைக்க போலீஸார் தண்ணீர் பீய்ச்சி அடித்தனர். எனினும், 'டாக் பங்களா' சந்திப்பில் அமைக்கப்பட்டிருந்த தடுப்புகளை உடைத்துக்கொண்டு போராட்டக்காரர்கள் முன்னேறினர். இதனால், அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

இந்தப்பேரணியைக் கருத்தில் கொண்டு பாட்னா முழுவதும் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. 'டாக் பங்களா' சந்திப்பு, வருமானவரி அலுவலகம் உள்ளிட்ட ஆளுநர் மாளிகைக்குச் செல்லும் வழியில் உள்ள முக்கிய இடங்களில் கூடுதல் போலீஸாரும் அதிகாரிகளும் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

முன்னதாக, கல்விச் செயலாளர் மற்றும் பாட்னா மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட மூத்த அரசு அதிகாரிகள், மாணவர் பிரதிநிதிகளுடன் (திங்கட்கிழமையன்று) பேச்சுவார்த்தை நடத்தினர். பல விவகாரங்களில் உடன்பாடு எட்டப்பட்டாலும், தவறான பதில்களுக்கு மதிப்பெண் குறைக்கும் முறையை நீக்குதல், ஒரே கட்டத் தேர்வை நடத்துதல் போன்ற கோரிக்கைகளில் ஒருமித்த கருத்து எட்டப்படவில்லை.



சேலம் மாவட்ட ஆட்சியரகத்தில் சாலை பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து காவல்துறை மற்றும் அரசுத்துறை அலுவலர்களுடனான மாதாந்திர ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.இளம்பகவத், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இரா.ரவிக்குமார், மாநகர காவல் துணை ஆணையர் திரு.மகேந்திரன், இ.கா.ப., (தெற்கு) உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

# கீழப்பாவூர் பகுதிகளில் மாவட்ட ஆட்சியர் ரஞ்ஜீத் சிங் கள ஆய்வு

## வளர்ச்சித் திட்டப் பணிகள் மற்றும் நலத்திட்டங்கள் குறித்து நேரில் ஆய்வு



தென்காசி, ஆக. 25: தென்காசி மாவட்டத்தில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சியர் ரஞ்ஜீத் சிங், இ.ஆ.ப., (ஆக.25) கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

முதற்கட்டமாக புதிதாக கட்டப்பட்டு வரும் கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டிடப் பணிகளை ஆய்வு செய்த ஆட்சியர், தொடர்ந்து மண்டல நாட்டின நாய்கள் இனப் பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி மையம், கால்நடை மருத்துவமனை மற்றும் ஆய்வகத்தை பார்வையிட்டார். அங்கு பொதுமக்களுக்கு வழங்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்து கால்நடை மருத்துவர்களிடம் கேட்டறிந்தார்.

இதனைத் தொடர்ந்து புதிதாக கட்டப்பட்டுள்ள கீழப்பாவூர் அரசு ஆரம்ப துணை சுகாதார நிலையம் மற்றும் இராஜபாண்டி நல்வாழ்வு மையத்தை பார்வையிட்டு, வளாகத்தில் மரக்கன்று நட்டார். மேலும் இராஜபாண்டி ஊராட்சி நியாய விலைக் கடையில் பொருட்களின் இருப்பு மற்றும் பொது மக்களுக்கு வழங்கப்படும் பொருட்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

வீரகேரளம்புதூர் தாயார்தோப்பு ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் மாணவர்களிடம் பாடங்கள் குறித்து கேட்டறிந்த ஆட்சியர், தாயார்தோப்பு அங்கன்வாடி மையத்தையும் ஆய்வு செய்தார்.

மேலும், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் மானியக் கடன் பெற்று செயல்பட்டு வரும் சிவசக்தி தையல் தொழில் குழுவின் உற்பத்தி கூடத்தையும் பார்வையிட்டார்.

இந்த ஆய்வின்போது அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

# அகரம் ஸ்ரீ காளியம்மன் கோவிலில் பூட்டை உடைத்து அம்மன் நகைகள் திருட்டு

## திருட்டு வழக்கில் 2 வாலிபர்கள் கைது



கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அருகே உள்ள அகரம் கிராமத்தில் ஸ்ரீ காளியம்மன் திரௌபதி அம்மன் கோவில் அமைந்துள்ளது. நேற்று இரவு வழக்கம்போல் பூஜைகள் முடிந்து கோவில் பூட்டப்பட்டிருந்த நிலையில், நள்ளிரவில் புகுந்த மர்ம நபர்கள்சிலர்கோவில் கதவின் பூட்டைஉடைத்துஉள்ளே நுழைந்துள்ளனர். அங்குள்ள 3 அம்மன் சிலைகளில் இருந்த தங்கத் தாலிகள் மற்றும் வெள்ளிக் கிரீடத்தை திருடிக்கொண்டு தப்பிச் சென்றனர்.

இன்று காலை கோவில் பூட்டு உடைக்கப்பட்டு நகைகள் கொள்ளையடிக்கப்பட்டிருப்பதை கண்டு அதிர்ச்சியடைந்த தர்ம கர்த்தா கோட்டீஸ்வரன் (28), உடனடியாக நாகரசம்பட்டி காவல் நிலையத்தில் புகார் அளித்தார். புகாரின் பேரில் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த நாகரசம்பட்டி போலீசார்வழக்குப்பதிவு செய்து தீவிர விசாரணை மேற்கொண்டனர். அப்போது அப்பகுதியில் சந்தேகப்படும்படியாகச் சுற்றித்திரிந்த இரண்டு நபர்களைப் பிடித்து விசாரணைநடத்தியதில், அவர்கள் இருவரும் நேற்று இரவு அகரம் கோவிலின் பூட்டை உடைத்து நகைகளைத் திருடியதை ஒப்புக்கொண்டனர். தொடர்ந்து நடத்திய விசாரணையில், கைது செய்யப்பட்டவர்கள் போச்சம்பள்ளி அருகே உள்ள ஏ. மோட்டூர் கிராமத்தைச் சேர்ந்த மாரியப்பனின் மகன் சூர்யா (20) மற்றும் கிருஷ்ணகிரி கே.ஆர்.பி டேம் அருகே உள்ள கொத்துபள்ளியைச் சேர்ந்த வரதராஜனின் மகன் கந்தன் (22) என்பது தெரியவந்தது.

அவர்களிடமிருந்து 8 கிராம் தங்கத் தாலி மற்றும் 500 கிராம் வெள்ளிக் கிரீடம் ஆகியவற்றை போலீசார் பறிமுதல் செய்தனர். மேலும், இவர்கள் வேறு ஏதேனும் திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளனரா என்ற கோணத்தில் நாகரசம்பட்டி போலீசார்தொடர்ந்துவிசாரணை நடத்தி வருகின்றனர். இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தின தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்!

# 2029ல் ராகுல் காந்தி பிரதமர் ஆவார்: காங்கிரஸ் (கி) மாவட்ட தலைவர் லாரன்ஸ் நாகர்கோவிலில் பேட்டி



நாகர்கோவில் ஆக 26

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டகாங்கிரஸ்தலைவராக பொறுப்பேற்றுள்ள லாரன்ஸ் நேற்று நாகர்கோவில்அரசுவிருந்தினர் மாளிகைக்கு வருகை தந்தார்.

அவருக்கு குமரி கிழக்கு மாவட்ட சிறுபான்மை பிரிவு செயலாளர். வழக்கறிஞர் டேனிதாஸ் தலைமையில் நிர்வாகிகள் சால்வை அணிவித்து மரியாதை தெரிவித்தனர். இந்நிகழ்வில் காங்கிரஸ் நாகர்கோவில் மாநகர மாவட்ட தலைவர்.எம். மரிய ஜெயின் ஜெனிஸ் ( ஓ பி சி பிரிவு),இளைஞர் காங்கிரஸ் கிழக்கு மாவட்ட தலைவர்.டைசன், வழக்கறிஞர்.தனசேகர்(கிழக்கு மாவட்ட ஓபிசி பிரிவு துணைத்தலைவர்), ராஜாக்கமங்கலம் மேற்கு வட்டார தலைவர் முருகேசன், இராஜாக்கமங்கலம் வட்டார செயல் தலைவர்.கிங்ஸ்டன் மற்றும் வழக்கறிஞர் எபின்,சபாபதி ஆலன், சான்ஜியோ, அப்சல்காதர்,சச்சியின்லியோ,சஜித் லியேரட் மற்றும் பலர் கலந்து கொண்டனர். அதனைத் தொடர்ந்து செய்தியாளர்களைசந்தித்தகுமரி கிழக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் லாரன்ஸ் தெரிவித்ததாவது :

காங்கிரஸ் இயக்கத்தில் இலட்சக்கணக்கான இளைஞர்களை உறுப்பினர்களாக இணைப்பது தான் எனது நோக்கம், காங்கிரஸ் கமிட்டியை அடிமட்ட அளவில் வலுப்படுத்த SSA2 திட்டத்தை நடைமுறைப்படுத்த வலிமை வாய்ந்த வட்டார தலைவர்களை நியமிப்பதற்கான பணிகளைதுவங்க உள்ளோம், முதல்வர் ஜோசப் விஜய் லஞ்சம் லாவண்யமற்ற நல்லாட்சி வழங்க வேண்டும் என்ற முனைப்போடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார், காமராஜர் எதை செய்தாரோ அதை செயல்படுத்துவதற்காக ஒரு இளைஞராக செயலாற்றி வருகிறார், அந்த அரசியலில் காங்கிரஸ் பங்கு எடுத்திருப்பதற்காக நாங்கள் பெருமை அடைகிறோம், இந்த அரசு குமரி மாவட்டத்தில் பல்வேறு நவீன திட்டங்களை கொண்டு வருவதை நாங்கள் வரவேற்கிறோம், இது மக்களுக்கான திட்டம், சர்வதேச சுற்றுலாத்தலம் உலக அளவில் அதன் திட்டங்கள் இருப்பதற்காக சுற்றுலாத்துறை அமைச்சர். ராஜேஷ்குமார் அதற்கான நிதிகளை பெற்று செயல்படுத்தி வருகிறார், மக்கள் கடந்த 12 ஆண்டுகளாக ஒவ்வொரு நாளும் துன்பத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் பாஜக வருவதற்காக ஆர். எஸ். எஸ், சன்பரிவார் போன்ற அமைப்புகள் திட்டமிட்டு காங்கிரஸ் மன்மோகன் சிங் ஆட்சியை குறை கூறி மக்களிடம் போய் வாக்குறுதிகளை அளித்து வெற்றி பெற்று ஆட்சி அதிகாரத்திற்கு வந்தார்கள்,

தற்போது கண்கூடாக தெரிகிறது அவர்கள் ஆட்சிக்கு வந்து தொடர்ந்து மக்களை வஞ்சிக்கும் செயலில் ஈடுபடுகின்றனர், மக்களுக்கான உரிமைகளை பறிக்கிறார்கள், கல்வி நிலையங்களில் சங்பரிவார்கள் தலையீடு உள்ளது,

அரசியல் அமைப்புச் சட்டத்தை அளிக்கின்ற முயற்சியில் ஈடுபடுகின்றனர், இதெல்லாம் எதிர்த்து உலக அளவில் இந்திய அளவில் குரல் கொடுக்கின்ற தலைவராக எதிர்க்கட்சித் தலைவராக ராகுல் காந்தி தனது பணியை செய்து கொண்டிருக்கிறார், மக்களைப் பிரித்தாளுகின்ற சூழ்ச்சிகளை வென்று ஒற்றுமைப்படுத்துவதற்காக குமரி முதல் இமயம் வரை நடைபயணம் மேற்கொண்டு ஒற்றுமைப்படுத்தும் முயற்சியை எடுத்துள்ளார், இதனால் மக்களிடையே நன்மதிப்பையும், மாணவர்களிடையே ஆதரவையும் பெற்றுள்ளார், பெண்களும், ஆண்களும் அனைத்து சமய மக்களும் போற்றக்கூடிய தலைவன் இந்தியாவை காக்க முடியும் என்றால் அது ராகுல் காந்தி தான் என்ற நம்பிக்கையை பெற்றிருக்கிறார், அதனால் 2029 ல் வரவிருக்கும் நாடாளுமன்ற தேர்தலில் ராகுல் காந்தி பிரதமராக ஆவார், நாட்டு மக்களுக்கான ஜனநாயக உரிமை வழங்குவார் என நம்புகிறோம் என்று தெரிவித்தார்.

# புதுக்கடை அருகே மனைவி மீது தாக்குதல் கணவர், பெண் உட்பட 2 பேர் மீது வழக்கு

புதுக்கடை, ஆக. 26 புதுக்கடை அருகே உள்ள கீழ்குளம் செந்தறை பகுதியை சேர்ந்தவர் ஷானு என்பவரது மனைவி அபிஷா (32). தற்போது இவர்கள் குடும்ப பிரச்சினை காரணமாக பிரிந்து வாழ்ந்து வருகின்றனர். இந்த நிலையில் அபிஷாவின் கணவர் ஷானு வேங்கோடு பகுதியை சேர்ந்த சுஜின் மனைவி மஞ்சுஷா என்பவருடன் சேர்ந்து தனியாக வசித்து வருவதாக கூறப்படுகிறது. இதனால் அபிஷா தன் கணவரிடம் விவாகரத்து கேட்டு தக்கலை தக்கலை குடும்பநல நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து, தற்போது விசாரணை நடைபெற்று வருகிறது. இதற்கிடையில் விவாகரத்திற்கு அபிஷா எதிர்ப்பு தெரிவித்து வருவதால், சம்பவ தினம் மஞ்சுஷாவின் தூண்டுதலின் பேரில் ஷானு, அபிஷாவின் வீட்டில் புகுந்து கெட்ட வார்த்தைகள் பேசி அவரை தாக்கியுள்ளார். மேலும் தலைமுடியை பிடித்து இழுத்து அவரது துணிகளை கிழித்ததுடன் கழுத்தில் அவரது கழுத்தில் கடந்த இரண்டரை பவுன் தங்க சங்கிலியை ஷானு பறித்து சென்றுள்ளார். மேலும் அபிஷாவின் செல்போனையும் எடுத்து சென்று விட்டதாக கூறப்படுகிறது.

இது குறித்து அபிஷா புதுக்கடை போலீசில் புகார் அளித்தார். புதுக்கடை போலீசார் ஷானு, மஞ்சுஷா ஆகியோர் மீது வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# மிலாடி நபி முன்னிட்டு சேலம் மாவட்டத்தில் மதுபான கடைகள் மற்றும் மதுபானக்கூடங்கள் விடுமுறை

சேலம் ஆக 26 தமிழ்நாடு அரசால் 26.08.2026 மிலாடி நபி கொண்டாட்டத்தை முன்னிட்டு மதுபான கடைகளுக்கு விடுமுறை அளிக்கப்பட வேண்டும் என கூறப்பட்டுள்ளது. சேலம் மாவட்டத்தில் உள்ள அனைத்து எஃப் எல் 1, எஃப் எல் 2, எஃஎல்3ஏ மற்றும் எஃப் எல் 3ஏஏ உரிமம் பெற்ற ஹோட்டல் மற்றும் கிளப்களில் இயங்கி வரும் மதுபானக்கூடங்கள், டாஸ்மாக் மதுபான கடைகள் (எஃப் எல் 11) மற்றும் டாஸ்மாக் மதுபான கடைகளுடன் இணைந்துள்ள மதுபான கூடங்கள் அனைத்தும் மூட உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்கண்ட நாளில் மதுபானம் விற்பனைசெய்யக்கூடாது. உத்தரவை மீறி விற்பனை செய்பவர்கள் மீது அரசு விதிகளின்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் இளம் பகவத் தெரிவித்துள்ளார்.

# திம்மாபுரத்தில் கேப்டன் விஜயகாந்தின் 74வது பிறந்தநாள் விழா



கிருஷ்ணகிரி ஆகஸ்ட் 26: கிருஷ்ணகிரி அடுத்த காவேரிப்பட்டினம்மேற்கு ஒன்றியம் திம்மாபுரம் கிராமத்தில் தேமுதிக நிறுவன தலைவர் பத்மபூஷன் கேப்டன் விஜயகாந்தின் 74 ஆம் ஆண்டு பிறந்தநாள் விழா மாவட்ட பிரதிநிதி ஆர் கணேசன் தலைமையில் நடைபெற்றது இந்த நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் கே.ஆர். சின்னராஜ் கலந்து கொண்டு, கேப்டன் விஜயகாந்தின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செய்யப்பட்டது. பின்னர் கேக் வெட்டி சுமார் 500க்கும் மேற்பட்டோருக்கு அன்னதானம் வழங்கினார்கள். இந்த நிகழ்ச்சியில் மாநில வர்த்தக அணி செயலாளர் முருகேசன், மாவட்ட பொருளாளர் லட்சுமணன், கிழக்கு ஒன்றிய செயலாளர் முருகன், மேற்கு ஒன்றிய செயலாளர் வஜ்ரவேல், மாவட்ட இளைஞரணி செயலாளர் கணக்கன், காவேரிப்பட்டினம் ஒன்றிய செயலாளர் அதிரடி பிரபு, கழக நிர்வாகிகளான ஜி.ரஞ்சித், திருப்பதி, ஆனந்தன், ஈஸ்வரன், சுகுமார், ரவிச்சந்திரன், குமார், முரளி, ராஜா, டெய்லர், மற்றும் கட்சி நிர்வாகிகள், ஊர் கவுண்டர்கள் லட்சுமணன், அண்ணாதுரை, பூங்காவன நகர் திருப்பதி, திமுக முன்னாள் கவுன்சிலர் அம்மு பழனி, ராஜா, சக்திதானம், சீனி, காங்கிரஸ் கலை பிரிவு கோவிந்தசாமி, அதிமுக முன்னாள் தலைவர் துரைசாமி, தவெக சார்பில் அஜித், லிங்கேஷ், சுபாஷ், சக்திவேல், பாமக சார்பாக சரவணன், ஒன்றிய நிர்வாகி ஜெயராமன், பாஜக சார்பாக பூவரசன், திமுக சார்பாக ஆர்மி செந்தில், ஆர்மி சங்கர், மற்றும் ஊர் பொதுமக்கள் லோகநாதன், சர்வேயர் வேடியப்பன், மாதேசன், கோவிந்தராஜ், விவசாய அணி தலைவர் மற்றும் ஊர் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்துகொண்டு விஜயகாந்தின் 74வது பிறந்தநாள் விழா நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

# கனவு காணுங்கள் தனித்திறமை வளர்த்து கொள்ளுங்கள்;நாசா விஞ்ஞானி அறிவுரை

ஈரோடு, ஆக. 26 மக்கள் சிந்தனைப் பேரவை சார்பில் ஈரோட்டில் நடைபெற்ற சிறப்பு நிகழ்ச்சிக்கு, பேரவைத் தலைவர் ஸ்டாலின் குணசேகரன் தலைமை வகித்தார். இதில் நாசா விண்வெளி விஞ்ஞானி சரத் கிரிமாஜிகலந்துகொண்டு பேசினார்.




அவர் கூறியதாவது: ஈரோட்டில் 6ம் வகுப்பு படித்தபோது, நீல் ஆம்ஸ்ட்ராங் நிலவில் முதன்முறையாக கால் வைத்த செய்தி தன்னை வெகுவாக ஈர்த்ததாகவும், அதுவே விண்வெளி குறித்த ஆர்வத்தை ஏற்படுத்தியதாகவும் தெரிவித்தார். சென்னை மற்றும் அமெரிக்காவில் கல்வி பயின்ற அவர், ஆராய்ச்சியில் கொண்ட ஈடுபாட்டால் 1990ம் ஆண்டு நாசாவில் விஞ்ஞானியாக சேர்ந்ததாக கூறினார்.

ஹைப்பர்சோனிக் விமானங்கள் தொடர்பான ஆராய்ச்சியில் ஈடுபட்டு, மணிக்கு 18 ஆயிரம் கிலோமீட்டர் வேகத்தில் செல்லக்கூடிய விமானத்தை உருவாக்கும் முயற்சியில் வெற்றி பெற்றதாகவும், இதன் மூலம் வாஷிங்டனில் இருந்து டோக்கியோவை இரண்டு மணி நேரத்தில் அடைய முடியும் என்றும் தெரிவித்தார்.

எனினும், தொழில்நுட்ப சாதனைகளைவிட காலநிலை மாற்றம் தொடர்பான ஆராய்ச்சியே தற்போது முக்கியம் எனக் கருதி, கடந்த 10 ஆண்டுகளாக அதில் ஈடுபட்டு வருவதாக கூறினார். கடல் மட்ட உயர்வால் கொல்கத்தா, மும்பை, கொச்சி உள்ளிட்ட கடற்கரை நகரங்கள் 2050ல் கடும் பாதிப்பை சந்திக்கக்கூடும் என்றும் எச்சரித்தார்.

மாணவர்கள் கனவு காணவும், தனித்திறன்களை வளர்த்துக்கொள்ளவும், கடின உழைப்பை கைவிடாமல் சமூக மேம்பாட்டுக்காக செயல்படவும் அவர் அறிவுறுத்தினார்.

முன்னதாக பேரவை பொதுக்குழு உறுப்பினர் வெற்றிவேல் வரவேற்றார். ராஜா நன்றி கூறினார்.




தூத்துக்குடி மாவட்டம், மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட போதைப்பொருள் தடுப்பு வழக்கில் 5.5 கிலோ கஞ்சாவைப் பறிமுதல் செய்து, நபர்களைக் கைது செய்து வழக்குப் பதிவு செய்த போதைப்பொருள் தடுப்புப் படையைச் சேர்ந்த காவல் உதவி ஆய்வாளர் ஐ. முத்துராஜா தலைமைக் காவலர்கள் மு. கார்த்திக் ஜே. ஜோசப் , காவலர்கள் அ. விசு , ப. தினேஷ்குமார் மற்றும் போக்குவரத்துப் பிரிவு தலைமைக் காவலர் ஆகியோரின் சிறப்பான பணியைப் பாராட்டி, நேற்று திருநெல்வேலி சரக காவல்துறை துணைத் தலைவர் முனைவர் இரா. திருநாவுக்கரசு, அவர்களை சரக அலுவலகத்திற்கு நேரில் அழைத்து, பாராட்டி, பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கி கௌரவித்தார்கள்.



# காவேரிப்பட்டினத்தில் விஜயகாந்த் பிறந்தநாள் விழா

காவேரிப்பட்டினம், ஆக. 26: தேமுதிக நிறுவனத் தலைவர் கேப்டன் விஜயகாந்தின் 74வது பிறந்தநாளை முன்னிட்டு, காவேரிப்பட்டினம் ஒன்றிய தேமுதிக சார்பில் பேருந்து நிலையத்தில் கேக் வெட்டி கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சிக்கு ஒன்றிய செயலாளர் விஜய் வல்லரசு தலைமை வகித்தார்

தொடர்ந்து பொதுமக்களுக்கு பிரியாணி அன்னதானம் வழங்கப்பட்டது. சிறப்பு அழைப்பாளராக மாவட்ட கழக செயலாளர் கே.ஆர். சின்னராஜ் கலந்து கொண்டு அன்னதானத்தை தொடங்கி வைத்தார். பின்னர் விஜயகாந்தின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது

நிகழ்ச்சியில் ஒன்றிய பொருளாளர் கே.மாதையன் வரவேற்றார். ஒன்றிய அவைத்தலைவர் சின்னையன்,

பொதுக்குழு உறுப்பினர் காதர், மாவட்ட இளைஞரணி செயலாளர் பி.சி. கணக்கன், ஒன்றிய துணை செயலாளர் பி.சி.குமார் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட பொருளாளர் லட்சுமணன், மாநில வர்த்தக அணி துணை செயலாளர் முருகேசன், கட்சி நிர்வாகிகள், இளைஞரணி மற்றும் தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர். இறுதியில் நகரக்கழக செயலாளர் கே.எஸ்.அன்வர் நன்றி கூறினார்.

# தஞ்சாவூரில் "புதிய பாதை 2026" திட்டம் தொடக்கம்

தஞ்சாவூர், ஆக. 26: தமிழகத்தில் முதல்முறையாகதஞ்சாவூர்மாவட்டத்தில், கூர்நோக்கு இல்லங்களில் இருந்து வெளியேறிய குழந்தைகள் மற்றும் இளைஞர்களின் எதிர்கால நல்வாழ்வுக்காக "புதிய பாதை 2026" திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் புனித சேவியர்தொழில்பயிற்சிமைய கூட்டரங்கில் மாவட்ட நிர்வாகம், குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறை, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகம் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கலெக்டர் ரேவதி திட்டத்தை தொடங்கி வைத்து விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டார். அப்போது அவர்கூறியதாவது: "புதிய பாதை" திட்டம், கூர்நோக்கு இல்லங்களில் இருந்து வெளியேறியவர்கள் மற்றும் முதல்முறையாக குற்றச்செயல்களில் ஈடுபட்ட குழந்தைகள், இளைஞர்களை கடந்த கால தவறுகளின் அடிப்படையில் நிராகரிக்காமல், அவர்களுக்கு புதிய வாய்ப்பையும் வாழ்க்கைப் பாதையையும் உருவாக்குவதே நோக்கமாகும்.

திட்டத்தின் மூலம் கல்வி, தொழிற்பயிற்சி, திறன் மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்புடன் இளைஞர்களை இணைத்து, அவர்கள் வாழ்க்கையில் முன்னேற வழிவகை செய்யப்படும். தஞ்சாவூர் மாவட்டத்தில் திட்டம் வெற்றியடைந்தால், அதன் செயல்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு தமிழகத்தின் பிற மாவட்டங்களிலும் விரிவுபடுத்துவதற்கு முன்னுதாரணமாக அமையும்.

"கடந்த காலம் உங்கள் எதிர்காலத்தை தீர்மானிக்காது. கல்வி, திறன், உழைப்பால் புதிய வாழ்க்கையை உருவாக்க முடியும்" என்ற நம்பிக்கையை இளைஞர்களிடம் ஏற்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கம் என்றார்.

நிகழ்ச்சியில் நீதித்துறை, காவல்துறை மற்றும் பல்வேறு அரசுத் துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# முதியவரை அடித்து கொன்ற 6 பேருக்கு 3 வருட சிறை பத்மநாபபுரம் கூடுதல் அமர்வு நீதிமன்றம் தீர்ப்பு

பத்மநாபபுரம், ஆக.26 குமரி மாவட்டம் மேக்காமண்டபம் பாலபள்ளி, தாணி விளை பகுதியை சார்ந்த 65வயது முதியவர் ராமசாமி. இவருடைய பேரன் சலின் என்பவர் கேரளாவில் ஜெ.சி.பி. டிரைவராக வேலை செய்து வருகிறார். இவருடைய தூரத்து உறவினரான கீதா என்பவருக்கும் இவருக்கும் முன் விரோதம் இருந்து வந்தது. கடந்த 10.3.2014 ம் தேதி காலை 8.45 மணிக்கு ராமசாமியும், விடுமுறையில் கேரளாவில் இருந்து ஊருக்கு வந்த பேரன் சலின் சேர்ந்து கீதாவின் வீட்டிற்க்கு சமரசம் பேச சென்றனர். அப்போது கீதா மற்றும் அவருடன் இருந்த சசி, நாராயண குமார், ரமேஷ், வினு, ஜெயராம், ரெதீஷ் ஆகியோர் இடையே ஏற்பட்ட வாய் தகராறில் ராமசாமியை அடித்து உதைத்தனர்.

இதில் படுகாயம் அடைந்த ராமசாமியை சலின் மற்றும் அக்கம் பக்கத்தினர் மீட்டு தக்கலை அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு அவரை பரிசோதித்த டாக்டர் அவர் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தார். இச் சம்பவம் குறித்து சலின் தக்கலை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். விசாரணை செய்த காவல்துறையில் கீதா உள்பட ஏழு பேரை கைது செய்து சிறையில் அடைத்தனர். இவ்வழக்கு விசராணை பத்மநாபபுரம் கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் நடந்து வந்தது. இவ் வழக்கை விசரணை செய்த நீதிபதி பரம சிவதாஸ் கீதாவை விடுதலை செய்தும், மீதி உள்ள 6 பேருக்கு 3 ஆண்டுகள் சிறை தண்டனையும் தலா 7ஆயிரம் ருபாய் அபராதவும் , கூட்டு சேர்த்து தாக்கிய குற்றத்திற்க்கு 6 மாதம் சிறை தண்டனையும் ருபாய் 3 ஆயிரம் அபராதவும் விதித்து தீர்ப்பு வழங்கினார். இவ் வழக்கில் அரசு தரப்பில் வழக்கறிஞர்பெஞ்சமின்ரெனால்டு ராபின்சன் ஆஜரானார்.

# விளாத்திகுளத்தில் தேமுதிக சார்பில் கேப்டன் விஜயகாந்த் 74 வது பிறந்தநாள் விழா



விளாத்திகுளம் ஆகஸ்ட் 26. தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் பேருந்து நிலையம் முன்பு தேமுதிக சார்பில் கேப்டன் விஜயகாந்தின் 74 வது பிறந்த நாள் விழா மாவட்ட செயலாளர் சுரேஷ் தலைமையில் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர்கள் தூவி பிறந்தநாள் விழாஇனிப்புகள்வழங்கி கொண்டாடப்பட்டது. பின்பு நூற்றுக்கும் மேற்பட்டோருக்கு உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் மாவட்டத் துணைச் செயலாளர் ராஜபாண்டி, கிழக்கு ஒன்றிய செயலாளர் தங்கச்சாமி, மேற்கு ஒன்றிய செயலாளர் பொன்ராஜ், நகரச் செயலாளர் கோட்டைச்சாமி, நகர அவை தலைவர் மணிகண்டன், மாவட்ட பிரதிநிதிகள் வீராச்சாமி, முரளி ,ஆதிலிங்கம், தேமுதிக கிளைச் செயலாளர்கள் சங்கரன், மணிகண்டன், கந்தராஜ், முருகேசன், சங்கர்கணேசன், உட்பட தேமுதிக மகளிர் அணி ராணி பரிமளா மற்றும் நிர்வாகிகள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்காக நடைபெற்ற சிறப்பு கல்விக் கடன் முகாமில், மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி 110 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.12.84 கோடி கல்விக்கடனுதவிகளை வழங்கினார். உடன் முன்னோடி வங்கி மேலாளர் (கனரா வங்கி) விவேகானந்தன் உட்பட பலர் உள்ளனர்.



வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், காங்கேயநல்லூரில் அமைந்துள்ள திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களின் ஞானத்திரு வளாகத்தில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் பி.எஸ்.லீலா அலெக்ஸ், இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டார்




மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன்,மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா, இ.ஆ.ப., தலைமையில் மதுரை மாவட்டம், அரசு இராசாசி மருத்துவமனை வளாகத்தில் பாராளுமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூபாய் 26 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள பொதுமக்கள் காத்திருப்போர் கூடத்தினை திறந்து வைத்தார்.மாநகராட்சி மேயர்(பொ)/துணை மேயர் தி.நாகராஜன், இராசாசி மருத்துவமனை முதல்வர் மரு. அருள் சுந்தரேஷ்குமார் அவர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.

## ஈரோடு மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் பரவும் அபாயம்

# போலி மருத்துவரிடம் சிகிச்சை பெற வேண்டாம் என்று ஆட்சியர் வேண்டுகோள்

ஈரோடு ஆக 26 ஈரோடு மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை மற்றும் பருவகால மாறுதல்களால் காய்ச்சல் மற்றும் டெங்கு காய்ச்சல் அதிகரித்து வருகிறது.

டெங்கு காய்ச்சலை பரப்பும் ஏடிஸ் கொசு சுத்தமான நீரில் முட்டையிட்டு இனப்பெருக்கம் செய்கிறது. இது முட்டையிலிருந்து லார்வா, பியூப்பா என உருமாறி முதிர்ந்த கொசுவாக மாறுகிறது. டெங்குவை பரப்பும் கொசுக்களான ஏடிஸ் வகை கொசுக்கள் டயர், பயன்படுத்தாத உடைந்த சிமெண்ட் தொட்டிகள், பூந்தொட்டிகள், மணிபிளாண்ட் நீண்ட காலமாக கழுவப்படாத தொட்டிகள். உடைந்த பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் தேங்காய் சிரட்டைகள் போன்றவற்றில் தேங்கும் நீரினால் உருவாகிறது. இந்த ஏடிஸ் வகை கொசுக்கள் பகலில் கடிக்கும் தன்மையுடையது.

எனவே, ஏடிஸ் கொசு உருவாகும் தேவையற்ற பொருட்களை அகற்றிட வேண்டும். தண்ணீர் சேமித்து வைக்கும் தொட்டிகளை வாரம் ஒருமுறை நன்றாகத் தேய்த்து கழுவி நீர் பிடித்தபின் காற்று புகாதவாறு மூடி வைக்க வேண்டும்.

டெங்கு காய்ச்சலின் அறிகுறிகளாவன காய்ச்சல், சோர்வு, தலைவலி, உடல் வலி, வாந்தி, எலும்பு வலி ஆகியவையாகும்.

மலேரியா காய்ச்சல், எலி காய்ச்சல், டெங்கு காய்ச்சல், ஸ்கரப் டைபஸ், டைபாய்டு காய்ச்சல் போன்ற காய்ச்சல்களுக்கு. உரிய மருத்துவ சிகிச்சை பெற வேண்டும். மருத்துவ சிகிச்சை தாமதமானாலோ சுயமாக மருந்துகள் சாப்பிட்டாலோ போலி மருத்துவரிடம் சிகிச்சை பெற்றாலோ உடல் நலம் கடுமையான பாதிப்புக்குள்ளாக நேரிடும். உரிய சிகிச்சையும் முறையான கவனிப்பும் கொடுத்தால் டெங்கு காய்ச்சலை எளிதாக குணப்படுத்தலாம். காய்ச்சலுக்கு மருத்துவர்கள் கொடுக்கும் மருந்துகளை உரிய நேரத்தில் சாப்பிட வேண்டும்.

டெங்கு பரவலை தடுப்பது தொடர்பாக பள்ளி, கல்லூரி ஆசிரியர்களுக்கு ஆய்வுக்கூட்டம் நடத்தி பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு டெங்கு காய்ச்சல் தொடர்பான விழிப்புணர்வுகள் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் வாரம் தோறும் திங்கள் கிழமை உள்ளாட்சி, பேரூராட்சி, நகராட்சி, நீர் வழங்கல் துறை, பள்ளிக்கல்வி துறை போன்றவர்களை இணைத்து கொள்ளை நோய் தடுப்பு ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவரால் நடத்தப்பட்டு டெங்கு பரவலை தடுக்க நடிவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், குளோரினேசன் செய்யப்பட்ட குடிநீரை மக்களுக்கு வழங்குமாறு உள்ளாட்சி அமைப்புகளு தெரிவிக்கப்பட்டது. மேலும், மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் தனியார் மருத்துவர்களுக்கு டெங்கு மற்றும் இதர காய்ச்சல்களை குணப்படுத்த மேற்கொள்ள வேண்டிய சிகிச்சை முறைகள் குறித்து வழிகாட்டுதல் முறைகள் வழங்கப்பட்டுள்ளது.

கொசு புழு ஒழிப்பு பணியாளர்கள் ஊராட்சி, நகராட்சி, பேரூராட்சி, மாநகராட்சி பகுதிகளில் பணியமர்த்தப்பட்டு காய்ச்சல் கண்காணிப்பு, டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் வீடுகளுக்கு பணியாற்ற வரும் கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களுக்கு பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும் என்று ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி கேட்டுக் கொண்டு உள்ளார்.

# பலூனை விழுங்கிய 6 வயது சிறுவன் மூச்சுத்திணறி உயிரிழப்பு!

## நாட்றம்பள்ளி அருகே சோகம்!



திருப்பத்தூர், ஆக் 26, திருப்பத்தூர் மாவட்டம், நாட்றம்பள்ளி அடுத்த பச்சூர் பகுதியைச் சேர்ந்த குமார் சத்யா தம்பதியினரின் 6 வயது மகன் சோமநாத், தனியார் பள்ளியில் படித்து வந்துள்ளார். பெற்றோர் பர்கூர் பகுதியில் துணி வியாபாரம் செய்துவிட்டு வீடு திரும்பிய நிலையில், வீட்டில் இருந்த சிறுவன் பலூனை விழுங்கியதாக கூறப்படுகிறது.

பலூன் தொண்டையில் சிக்கியதால் மூச்சுத்திணறி மயங்கி விழுந்த சிறுவனை, பெற்றோர் நாட்றம்பள்ளி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். ஆனால், மருத்துவமனைக்கு செல்லும் வழியிலேயே சிறுவன் உயிரிழந்ததாக கூறப்படுகிறது. பரிசோதனையில் சிறுவனின் தொண்டையில் பலூன் சிக்கியிருந்தது தெரியவந்துள்ளது. இதையடுத்து நாட்றம்பள்ளி போலீசார் உடலை கைப்பற்றி கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

பலூனை விழுங்கிய 6 வயது சிறுவன் உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# கன்னியாகுமரியை சேர்ந்த 2 பேர் சவுதி அரேபியாவில் விபத்தில் உயிரிழப்பு

கன்னியாகுமரி, ஆக.26 கன்னியாகுமரி ஹைகிரவுண்ட் பகுதியை சேர்ந்தவர் ஜவான் லூயி (45), கன்னியாகுமரி மறக்குடி தெருவை சேர்ந்தவர் எட்வின் பிரபு(42). இவர்கள் இருவரும் சவுதிஅரேபியாலவில் ஒரு தனியார் நிறுவனத்தில் பணியாற்றி வந்தனர். இதில் ஜவான் லூயி பல ஆண்டுகளாக சவுதியில் பணியாற்றியுள்ளார். கன்னியாகுமரியில் இருந்து ஏராளமானவர்களை வெளிநாட்டில் வேலைக்கு அழைத்து சென்றுள்ளார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் அலுவல் நிமித்தமாக இருவரும் காரில் சென் றுள்ளனர். ஜவான் லூயி காரை ஒட்டியுள்ளார். கார் சவுதி அரேபியாவில் உள்ள கோபர் ரியாத் சாலையில் செல்லும் போது இழந்து கட்டுப்பாட்டை இழந்து கவிழ்ந்துள்ளது. இந்த விபத்தில் இருவரும் சம்பவ இடத்தில் பலியாகி உள்ளதாக கூறப்படுகிறது. இவர்கள் இருவருக்கும் திருமணமாகி மனைவியும் குழந்தைகளும் உள்ளனர் சவுதியில்ஒன்றாகபணியாற்றிய கன்னியாகுமரியை சேர்ந்த இருவர் விபத்தில் பலியான சம்பவம் கன்னியாகுமரி பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. இருவரது உடல்களையும் ஊர் கொண்டுவரும் முயற்சியில் உறவினர்கள் ஈடுபட்டுள்ளதாக கூறப்படுகிறது.



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் மாவட்ட சுகாதார நலச்சங்க ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் திரு. விஷூ மகாஜன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

# மாநில தழுவிய கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்



கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டாட்சியர் அலுவலகம் முன்புதமிழ்நாடு அனைத்து வகை மாற்றுத்திறனாளிகள் மற்றும் பாதுகாப்போர் உரிமைகளுக்கான சங்கம் (TARATDAC) சார்பில் நேற்று (25.08.2026) காலை 11 மணிக்கு மாநிலம் தழுவிய கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது ஆர்ப்பாட்டத்தில், ஆந்திர மாநிலத்தைப் போல தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாற்றுத்திறனாளிகளுக்கும் மாதம் ரூ.6,000 உதவித்தொகை வழங்க வேண்டும் என வலியுறுத்தப்படுகிறது. மேலும், அரசு உத்தரவு பெற்றும் இதுவரை மாற்றுத்திறனாளி உதவித் தொகை கிடைக்காமல் காத்திருக்கும் அனைவருக்கும் உடனடியாக உதவித்தொகையை வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன. மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு தமிழக அரசு தங்களது கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என சங்கத்தினர் வலியுறுத்தினர்

**நீரை சேமிப்போம்!**
**மரங்களை வளர்ப்போம்!**

# தமுமுகவின் 31 ஆண்டுகள் நிறைவு 32 ஆம் ஆண்டு தொடக்கம்

## மாநிலச் செயலாளர் நிர்வாகிகளுக்கும் தொண்டர்களுக்கும் வாழ்த்து செய்தி!

ராமநாதபுரம், ஆக.26 தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகத்தின் (தமுமுக) 31ஆம் ஆண்டு நிறைவு மற்றும் 32ஆம் ஆண்டு தொடக்கத்திற்கான வாழ்த்துச் செய்தியை தமுமுகவின் மாநில செயலாளர் சாதிக் பாட்சா தெரிவித்து உள்ளார். அவர் இதுகுறித்து வாழ்த்து செய்தி அறிக்கையில் கூறியிருப்பதாவது:

"மக்களுக்கான சேவையில் மனிதநேயப் பேரமைப்பு — தமுமுக 32 ஆம் ஆண்டில் சுவடு பதிக்க வாழ்த்துகள்!" 31 ஆண்டுகளை வெற்றிகரமாக நிறைவு செய்து, 32ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகத்திற்கும் (தமுமுக), அதன் வளர்ச்சிக்கு வித்திட்டு தியாகங்கள் பல புரிந்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும், களப்பணியாளர்களுக்கும் நெஞ்சம் நிறைந்த வாழ்த்துகள். ஒடுக்கப்பட்ட, பாதிக்கப்பட்ட மக்களின் குரலாக ஒலிப்பதையும், பிற்படுத்தப்பட்ட முஸ்லிம்களுக்கான 3.5% இட ஒதுக்கீட்டைப் பெற்றுத் தந்த வரலாற்றுச் சாதனையையும் முதன்மை நோக்கமாகக் கொண்டு உருவான இப்பியக்கம், இன்று தமிழகத்தின் தலைசிறந்த மனிதநேய அமைப்பாக மிளிர்கிறது.



தமுமுகவின் மகத்தான களப்பணிகள் மனிதநேய அவசர ஊர்தி சேவை: 2003ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட அவசர ஊர்தி சேவை, இன்று 220க்கும் மேற்பட்ட ஆம்புலன்ஸ்களுடன் 24/7 இயங்கி வருகிறது. தமிழகத்தில் பிற அமைப்புகளும் இச்சேவையைத் தொடங்க முன்னோடியாகத் திகழ்ந்த பெருமை தமுமுகவையே சாரும். குருதிக்கொடை முகாம்கள்: சாதி, மத எல்லைகளைக் கடந்து, அவசர காலத்தில் குருதி வழங்கி உயிர்காக்கும் உன்னத சேவையில் முதன்மை வகிக்கிறது. பேரிடர் நிவாரணப் பணிகள்: சுனாமி பேரழிவு, பெருவெள்ளம், புயல் சீற்றங்கள் மற்றும் விபத்துக் காலங்களில் முதல் ஆளாகக் களத்தில் இறங்கி மக்கள் துயர் துடைத்த தியாக வரலாறு. கொரோனா காலத் தியாகம்: தொற்றுநோய் அச்சத்தால் சொந்த உறவுகளே தயங்கிய சூழலிலும், உயிரைப் பணயம் வைத்து கண்ணியமான முறையில் நிவாரணமும் மருத்துவ உதவிகளும் வழங்கிய மாபெரும் மனிதநேயக் கரம். வாழ்த்துச் செய்தி வடிவம் ( பதிவு செய்ய/பகிர) "1995 முதல் 2026 வரை... சேவையிலும் சமூக நீதியிலும் தொடரும் நெடும் பயணம்!" ஒடுக்கப்பட்டோரின் உரிமைக் குரலாகவும், ஏழை எளிய மக்களின் அவசரக் கரமாகவும் திகழும் தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகத்தின் 32ஆம் ஆண்டு தொடக்க விழாவில், களத்தில் நின்று உழைக்கும் அனைத்துத் தொண்டர்களுக்கும், நிர்வாகிகள் மற்றும் நல் நெஞ்சங்களுக்கும் நெஞ்சம் நிறைந்த நல்வாழ்த்துகள்! இவ்வாறு அவர் வாழ்த்து செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளார்.

# சேலம் மாவட்டத்தில் வீடு தோறும் மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027

## பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டுகோள்

சேலம், ஆக. 26: இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு நாட்டின் மிகப்பெரிய நிர்வாக செயல்முறையாகும். இதன் மூலம் மக்கள் தொகை மற்றும் சமூக, பொருளாதார விவரங்கள் குறித்த முக்கிய புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027க்கான பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இதன் முதல் கட்டமாக வீடுகள் பட்டியலிடுதல் மற்றும் வீடுகள் கணக்கெடுப்பு பணி தமிழ்நாட்டில் ஆகஸ்ட் 1 முதல் 30ம் தேதி வரை நடைபெறுகிறது. இரண்டாம் கட்டமாக மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027 பிப்ரவரி மாதத்தில் நடைபெற உள்ளது. 1948ம் ஆண்டு மக்கள்தொகைகணக்கெடுப்பு சட்டத்தின்படி, கணக்கெடுப்பு அலுவலர்கள் கேட்கும் கேள்விகளுக்கு பொது மக்கள் உண்மையான தகவல்களை வழங்குவது சட்டப்பூர்வ கடமையாகும். அலுவலர்கள் வீடுகளுக்குள் நுழையவும், கணக்கெடுப்புக்கான குறியீடுகள் மற்றும் எண்களை எழுதவோ, ஒட்டவோ பொதுமக்கள் அனுமதிக்க வேண்டும். கணக்கெடுப்பு பணிக்கு இடையூறு ஏற்படுத்துதல், தவறான தகவல் அளித்தல், பதிலளிக்க மறுத்தல் உள்ளிட்டவை தண்டனைக்குரிய குற்றங்களாகும்.

இத்தகைய குற்றங்களுக்கு ரூ.1,000 வரை அபராதமும், குறிப்பிட்ட குற்றங்களுக்கு 3 ஆண்டுகள் வரை சிறை தண்டனையும் விதிக்கப்படலாம்.

கணக்கெடுப்பின்போது பெறப்படும் தனிப்பட்ட தகவல்கள் சட்டப்பூர்வமாக பாதுகாக்கப்படுவதால், பொதுமக்கள் அச்சமின்றி உண்மையான விவரங்களைவழங்கி முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். இரண்டாம் கட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பு பணி 2027 பிப்ரவரி மாதத்தில் நடைபெறும்.

எனவே சேலம் மாவட்டத்தில் நடைபெற்று வரும் மக்கள்தொகைகணக்கெடுப்பு 2027 முதல் கட்டப் பணிக்கு பொதுமக்கள் முழுமையாக ஒத்துழைப்பு வழங்கியும்மக்கள்தொகை கணக்கெடுப்பு அலுவலர்கள் கேட்கும் கேள்விகளுக்கு சரியான மற்றும் உண்மையான தகவல்களை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. இவ்வாறு முதன்மை மக்கள்தொகைகணக்கெடுப்பு அலுவலர்/ சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் இளம் பகவத் தெரிவித்துள்ளார்.

# தருமபுரி மாவட்ட, நகர தேமுதிக சார்பில் கேப்டன் விஜயகாந்த் பிறந்தநாள் விழா

தருமபுரி ஆகஸ்ட் 26 தருமபுரி மாவட்ட தேமுதிக சார்பில் கட்சியின் நிறுவனர் கேப்டன் விஜயகாந்தின் 74 ம் ஆண்டு பிறந்தநாள் விழா தருமபுரி கிழக்கு மாவட்ட செயலாளர் குமார் தலைமையில், மாநில அவைத் தலைவர் மருத்துவர் இளங்கோவன் முன்னிலையில் நகரப் பேருந்து நிலையத்தில் 74 கிலோ கேக் வெட்டி சிறப்பாக கொண்டாடப்பட்டது. முன்னதாக பாளையம் புதூர் ஆதரவற்ற இல்லத்திற்கு உணவு வழங்கும் வகையில் மளிகை பொருட்கள் வாங்கப்பட்டது.



அதனைத் தொடர்ந்து செங்கொடிபுரத்தில் நகர செயலாளர் சங்கர் தலைமையில் கேக் வெட்டி 500 க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு இனிப்புகள் மற்றும் மதிய உணவு வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட பொருளாளர்கள் சீனிவாசன், ராமச்சந்திரன், மாநில கேப்டன் மன்றத் துணைச் செயலாளர் புல்லட் மாரிமுத்து, மேற்கு மாவட்ட துணை செயலாளர் மணி, தருமபுரி நகர மகளிர் அணி சுதா, முனியப்பன், ஒன்றிய செயலாளர்கள் விக்னேஷ், சரவணன், மணி, மாவட்ட இளைஞரணி துணை செயலாளர் செந்தாமரை, கண்ணன் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



கோவை மாவட்டம், அன்னூர் வட்டாரம், காரேகவுண்டன்பாளையம் ஊராட்சி பகுதியில் உள்ள கே755கெம்பநாயக்கன்பாளையம்தொடக்கவேளாண்மைகூட்டுறவுகடன்சங்கத்தில்டாப்செட்கோ மற்றும் டாம்கோ மாற்றுத்திறனாளி கடன் மேளா நடைபெற்றது.

இதில் சங்கத்தின் செயல் எல்லையில் வசிக்கும் பொது மக்களுக்கு ரூபாய் 50,000, வீதம் மாற்றுத்திறனாளிகளுக்கு வட்டியில்லா கடனும், பிற்படுத்தப்பட்டோர் மிகப் பிற்படுத்தப்பட்டோர் சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் ஆகியோருக்கு மிகக் குறைந்த வட்டியில் புதிதாக தொழில் தொடங்கவும், தொழில் விரிவாக்கம் செய்திடவும் கடன் தரப்படுகிறது. முகாமில் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டு லோனுக்கான விண்ணப்பங்களை செயலாளர் நாகரத்தினம் வசம் வழங்கினார்கள்.

# நாகர்கோவிலில் இளம் விஞ்ஞானிகளுக்கான பயிற்சி பட்டறை

## மாவட்ட ஆட்சித்தலைவர் பங்கேற்பு

நாகர்கோவில், ஆக.26 நாகர்கோவில் டதி அரசு மேல்நிலைப்பள்ளியில் 'நெக்ஸ்ட் ஜென் குமரி' என்ற தலைப்பின் கீழ் அரசு பள்ளிகளை சார்ந்த மாணவர்களின் ரோபோடிக் சயின்ஸ் வொர்க் ஷாப் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் கலந்துகொண்டார். பின்னர் அவர் தெரிவிக்கையில்:குமரி மாவட்டத்தில் மாணவர்களின் அறிவியல் திறனை ஊக்குவிப்பதற்காகவும், மாணவர்களின் அறிவியல் ஆர்வத்தை தூண்டி புதிய புதிய படைப்புகளை உருவாக்கிட வழிகாட்டும் விதமாகவும் மாணவர்களுக்கு பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. அந்தவகையில் 'நெக்ஸ்ட் ஜென் குமரி' என்ற தலைப்பின்கீழ் அரசு பள்ளிகளை சார்ந்த 200 மாணவர்களுக்கு ரோபோடிக் சயின்ஸ் வொர்க் ஷாப் நடைபெற்றது. இதில் அறிவியல் ஆர்வமும் உற்சாகமும் மிக்க பள்ளி மாணவர்கள் 40 பள்ளிகளில் இருந்து வருகை புரிந்து உள்ளனர்.



அரசுப் பள்ளி மாணவர்களிடம் அறிவியல் மற்றும் ஆராய்ச்சி சிந்தனைகளை ஊக்குவிக்க இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. தொடர்ந்து, மாவட்டம் முழுவதும் உள்ள அனைத்து வட்டாரங்களிலும் இத்தகைய பயிற்சி முகாம்கள் நடத்தப்பட உள்ளன. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் பேசினார்.

தொடர்ந்து மாணவர்கள் தயாரித்த ராக்கெட்டுகளை மாணவர்களுடன் இணைந்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் விண்ணில் செலுத்தப்பட்டது. மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பிரின்ஸ் ஆரோக்கிய ராஜ், கல்வி அலுவலர்கள், தலைமையாசிரியர், ஆசிரியர்கள், மாணவர்கள், துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

# உழவர் அலுவலர் தொடர்பு திட்டம் 2.0வை ரத்து செய்திட கோரி தமிழ்நாடு தோட்டக்கலை அலுவலர்கள் உண்ணவிரத போராட்டம்



சென்னை, ஆக 26, தமிழ்நாடு தோட்டக்கலைத் துறை அலுவலர்கள் சங்கக் கூட்டமைப்பின் சார்பில் கடந்த திமுக ஆட்சியில் கொண்டு வரப்பட்ட உழவர் அலுவலர் தொடர்பு திட்டம் 2.0 (UATT 2.0) வை ரத்து செய்திட கோரி சென்னை சிவானந்தா சாலையில் உண்ணாவிரத போராட்டம் நடைபெற்றது. இதில் 2000க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர்கள் சிவகுமார், முருகன் ஆகியோர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது: வேளாண் துறையால் உழவர் அலுவலர் திட்டம் கடந்த ஆண்டு இறுதியில் வேளாண் வல்லுநர்கள் ஆலோசிக்காமல், ஆய்வு மேற்கொள்ளாமல் அவசரத்தில் கொண்டுவரப்பட்டது. வேளாண்துறை தோட்டக்கலைத்துறை, வேளாண் வணிகம் மற்றும் விற்பனைத்துறை ஆகிய 3 துறை களப்பணியாளர்களை ஒன்றிணைத்து, மேற்படி 3 துறையுடன் நான்காவதாக வேளாண் பொறியியல் துறையும் இணைத்து அனைத்து திட்டங்களையும் ஒரு களப்பணியாளர் மேற்கொள்ள வேண்டும் இதுவே திட்டத்தின் நோக்கம் ஆகும். அடிப்படையில் வேளாண்துறை மற்றும் தோட்டக்கலைத்துறையும் வெவ்வேறு கல்வி தகுதியும் தொழில்நுட்பமும் கொண்டவை. தோட்டக்கலை பயிர் பற்றி படித்துள்ள களப்பணியாளர்களுக்கு வேளாண் பயிராகிய நெல்,கரும்பு, பயறு வகைகள் போன்ற வேளாண்மை பற்றிய பயிற்சியும் கள அனுபவமும் கிடையாது . அதே போன்று வேளாண் பயிர் பற்றிய படித்துள்ள களப் பணியாளுக்கு தோட்டக்கலை பயிர்களான வாழை, காய்கறி, பழங்கள் மற்றும் மலர் பயிர்கள் போன்ற பயிர்களுக்கு தொழில் நுட்பமோ, கள அறிவோ தெரியாத காரணத்தினால், விவசாயிகள் தாங்கள் பயிரிடப்பட்டுள்ள பயிர்களுக்கு தேவையான, சரியான தொழில்நுட்பமோ, உரப் பரிந்துரையோ வழங்க இயலாத சூழல் ஏற்பட்டுள்ளது. இது விவசாயிகளுக்கு பயிரழப்பும் , பொருளாதார இழப்பும் ஏற்படுத்த கூடும். மேலும் அரசாணை எண் 252ல் 3 முதல் 4 கிராமங்களுக்கு ஒரு களப்பணியாளர்கள்என அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் நடைமுறையில் 20% களப்பணியாளர்களுக்கு மட்டுமே 3 முதல் 4 கிராமங்களும், மீதமுள்ள 80% களப்பணியாளர்களுக்கு 8 முதல் 22 கிராமங்கள் வரை ஒதுக்கீடு செய்துள்ளனர் . மேலும் 1183 எக்டர் பரப்பளவிற்கு ஒரு விரிவாக்க பணியாளர் என பணி பிரித்தளிக்கப் படவில்லை . பல மாவட்டங்களில் ஒருவருக்கு 1300 முதல் 4000 எக்டர் வரை பரப்பு ஒதுக்கீடு செய்து அதிக பணிச்சுமையை எதிர்கொள்கிறார்கள். எனவே விவசாயிகள் மற்றும் அலுவலக நலனை பாதிக்கும் இத்திட்டத்தினை முற்றிலும் ரத்து செய்ய கோரி இந்த ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது என்று தெரிவித்தனர்.

# தஞ்சாவூரில் பள்ளி கல்வித்துறை சார்பில் மாணவர் மாணவியர்களுக்கான கலைத் திருவிழா தொடக்கம்



தஞ்சாவூர் ஆகஸ்ட் 26 தஞ்சாவூரில் பள்ளிக்கல்வித்துறை சார்பில் அரசு, அரசு உதவி பெறும் பள்ளி மாணவ, மாணவிகளுக்கான கலை திருவிழா தொடங்கியது

தஞ்சாவூர்தூய அந்தோனியார் உதவி பெறும் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் திருவிழாவை மாவட்ட கலெக்டர்ரேவதிதொடங்கி வைத் து தெரிவித்ததாவது;

நிகழாண்டுக்கானகலைத் திருவிழா போட்டிகளை இளையோர் திறன் என்ற மைய கருத்தின் அடிப்படையில் பள்ளி, வட்டாரம், மாவட்டம் மற்றும் மாநில அளவில் அரசு பள்ளி மாணவர்களு க்கு தனியாகவும், உதவி பெறும் பள்ளி மாணவர்களுக்கு தனியாகவும் இரண்டு நாட்கள் நடத்தப்படுகிறது .இதில் ,மாவட்ட அளவில் 9ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு 32 வகையான போட்டிகள் தூய அந்தோனியார் உதவி பெறும் மேல் நிலைப்பள்ளி, கல்யாண சுந் தரம் உதவி பெறும் மேல்நிலைப்பள்ளி,பெண்கள் கிறிஸ்தவ உதவி பெறும் மேல்நிலைப் பள்ளி ஆகிய இடங்களில் நடைபெற்று வருகிறது

இதில் தூய அந்தோனியார் பள்ளியில் கவின் கலை மற்றும் நுண்கலையின் கீழ் ஓவியம் வரைந்து வண்ணம் தீட்டுதல், பானை ஓவியம், களி மண் சிற்பம், மணல் சிற்பம் ,செதுக்கு சிற்பம், (காய்கறி, சோப்பு, மெழுகு) ரங்கோலி, ஆகிய போட்டிகள் நடைபெற்று வருகின்றன என்றார் கலெக்டர். இந்நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பேபி உள்ளிட்டோர்கலந்து கொண்டனர்

# புதுக்கடையில் சொத்து தகராறு சம்பந்தமாக மோதல்; இரு தரப்பினர் 19 பேர் மீது வழக்கு பதிவு

புதுக்கடை, ஆக. 26
புதுக்கடை ஸ்ரீ அம்பாள் நகர் பகுதியை சேர்ந்தவர் நாகேஸ்வரி (54). இவரது கணவரின் தங்கை குமாரி என்பவருக்கு அந்த பகுதியில் சொத்து உள்ளது. இந்த சொத்து சம்பந்தமாக அதே பகுதி சந்திமூடு என்ற இடத்தை சேர்ந்த கோபு (35) என்பவருடன் தகராறு இருந்து வந்தது. இந்த நிலையில் சம்பவ தினம் கோபு மற்றும் கண்டால் தெரியும் ஒன்பது பேர் உள்ளிட்ட கும்பல் அங்கு வந்து நாகேஸ்வரியை கெட்ட வார்த்தைகள்பேசி, அவரைகடுமையாக தாக்கியுள்ளனர். மேலும் அவரது வீட்டில் உள்ள கேமராவை உடைத்து அவருக்கு கொலை மிரட்டல் விடுத்துள்ளனர். இதில் காயம் அடைந்த நாகேஸ்வரி குழித்துறை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். இது குறித்த புகாரின் பேரில் புதுக்கடை போலீசார்வழக்குப் பதிவு செய்தனர்.

இது போன்று நாகர் கோவில், கோட்டாறு பகுதியை சேர்ந்த கண்ணன் (56) என்பவர் புதுக்கடை போலீசில் அளித்துள்ள புகாரில், புதுக்கடை ஸ்ரீ அம்பாள் நகரில் கண்ணனின் அண்ணன் மகன் அஸ்வினுக்கு அந்த இடத்தில் சொத்து உள்ளதாகவும், சம்பவ தினம் அந்த நிலத்தை அளக்க நில அளவையரை வரவழைத்து கண்ணன் அந்த பகுதிக்கு அளக்க சென்றுள்ளார். அப்போது அந்த பகுதியை சேர்ந்த ஆறுமுகம் பிள்ளை மகள் குமாரி (28) மற்றும்அவருடன்சேர்ந்து 8 பேர் கொண்ட கும்பல் நிலத்தை அளக்கவிடாமல்தடுத்துதகராறுசெய்து உள்ளனர். மேலும் கண்ணனின் உறவினர் ஆறுமுகம் அம்மாள் என்பவரை தாக்கி காயம் ஏற்படுத்தியதாகவும், அவர் குழித்துறை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாகவும் புகாரில் கூறியுள்ளார்.

இந்த இரு புகார்கள் பேரில் இரு தரப்பினர் 19 பேர் மீது புதுக்கடை போலீஸ் சப் இன்ஸ்பெக்டர்கார்த்திக்வழக்குபதிவு செய்து விசாரித்து வருகிறார்.

# கோவையில் மாற்றுத்திறனாளிகளுக்கான கடன் மேளா



கோவை ஆக:26
கோவை மாவட்டம் அன்னூர் வட்டாரம் கரியாம்பாளையம் ஊராட்சி பகுதியில் உள்ள கே.7080 பி.கரியாம்பாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் டாப்செட்கோ மற்றும் டாம்கோ மாற்றுத்திறனாளி கடன் மேளா நடைபெற்றது.

இதில் சங்கத்தின் செயல் எல்லையில் வசிக்கும் பொது மக்களுக்கு ரூபாய் 50,000, வீதம் மாற்றுத்திறனாளிகளுக்கு வட்டியில்லா கடனும், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் ஆகியோருக்கு மிகக் குறைந்த வட்டியில் புதிதாக தொழில் தொடங்கவும், தொழில் விரிவாக்கம் செய்திடவும் கடன் தரப்படுகிறது.

இம்முகாமில் பலர் கலந்து கொண்டு லோனுக்கான விண்ணப்பங்கள் சங்கத்தின் செயலாளர் நடராஜன் வசம் வழங்கினார்கள். உடன் துறை சார்ந்த அலுவலர்கள் இருந்தனர்.

# புதுக்கடை அருகே தூய்மை பணியாளரை தாக்கியவர் மீது வழக்கு பதிவு

புதுக்கடை, ஆக. 26
புதுக்கடை அருகே உள்ள பைங்குளம் ஊராட்சியில் தூய்மை காவலராக பணி புரிந்து வருபவர் மனோன்மணி (47). இவர் கடந்த 18ஆம் தேதி அம்சி அருகே உள்ள கால்நடை ஆஸ்பத்திரி கட்டிடத்தில் தூய்மை பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது அங்கு வந்த அதே பகுதியை சேர்ந்த அஜின் (23) என்பவர் மனோன்மணியை தாக்கி உள்ளார். இதில் அவருக்கு மூக்கில் ரத்த காயம் ஏற்பட்டது. இது குறித்து புதுக்கடை போலீசில் மனோன்மணி புகார் அளித்தார். இந்த நிலையில் நேற்று தூய்மைப் பணியாளரை தாக்கியவர்கள் மீது நடவடிக்கைஎடுக்கவலியுறுத்தி தூய்மை பணியாளர்கள் இணைந்து பைங்குளம் ஊராட்சி அலுவலகம் முன்பு நேற்று முன்தினம் முற்றுகை போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த நிலையில் முஞ்சிறை ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் ராஜகுமார், புதுக்கடை போலீஸ் இன்ஸ்பெக்டர் மீனா உள்ளிட்டோர் தூய்மை பணியாளர்களிடம் பேச்சு வார்த்தை நடத்தினர். தொடர்ந்து அஜின் மீது வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# தருமபுரி மாவட்ட பள்ளிக் கல்வித்துறை தூய்மை பணியாளர்கள் சங்கம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்




தருமபுரி ஆகஸ்ட் 26
தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே மாவட்ட பள்ளி கல்வித் துறை தூய்மை பணியாளர்கள்சங்கம் சார்பில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட பொருளாளர் எல்லம்மாள் முன்னிலை வகித்தார். இதில் தருமபுரி, பென்னாகரம், கடத்தூர், பாலக்கோடு, மொரப்பூர், அரூர் ஆகிய வட்டாரங்களில் 11 மாதமும், காரிமங்கலத்தில் மூன்று மாத நிலுவை தொகையை உடனே வழங்க வேண்டும். தருமபுரி மாவட்டத்தில் 11 மாதம் நிலுவை தொகையான தொடக்கப் பள்ளி தூய்மை பணியாளர்களுக்கு ரூ.5,500, நடுநிலைப்பள்ளிக்கு ரூ. 8,800 , உயர்நிலைப்பள்ளிக்கு ரூ .12,650, மேல்நிலைப் பள்ளிக்கு ரூ. 16,500 நல்லம்பள்ளி, பாப்பிரெட்டிப்பட்டி வட்டார வளர்ச்சி அலுவலகங்கள், பள்ளி தலைமையாசிரியர்கள், வங்கி சேமிப்பு கணக்கில் செலுத்தியும், இதனைப் பள்ளி தூய்மை பணியாளர்களுக்கு வங்கியில் இருந்து எடுத்து பள்ளி தலைமை ஆசிரியர்கள் வழங்காமல் இருப்பவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுத்து வழங்க வேண்டும். அரசு பள்ளி தூய்மை பணியாளர்களுக்கு வழங்கும் மாத சம்பளத்தினை பள்ளி தூய்மை பணியாளர்களின் வங்கிக் கணக்கில் மாதந்தோறும் சம்பளம் வழங்க தமிழ்நாடு அரசு ஆவண செய்ய வேண்டும் உள்ளிட்ட 9 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி கோசங்கள் எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் தருமபுரி மாவட்ட பள்ளி கல்வித்துறை தூய்மை பணியாளர்கள் சங்க மாவட்ட செயலாளர் கே. ரவிச்சந்திரன், துணைச் செயலாளர்கள் ஜெ.பிரதாபன், வெ.பை.மாதையன், FITU ஜி. மாதையன், சேலம் சத்யபாமா, கிருஷ்ணகிரி ஸ்ரீபிரியா, ஊத்தங்கரை அன்பரசு ஆகியோர் கோரிக்கையை விளக்கிப் பேசினார்கள். இந்த ஆர்ப்பாட்டத்தில் தருமபுரி மாவட்ட ஒன்றிய தலைவர்கள், செயலாளர்கள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.




விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் உயர்கல்வி சேர்க்கை தொடர்பான தொழிற்பயிற்சிநிலையம் (ITI) மற்றும்பல்தொழில்நுட்பகல்லூரி (Polytechnic) முதல்வர்களுடனான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.என்.ஓ.சுகபுத்ரா,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.



# டாக்டர்.ஆர்.வி.கலை அறிவியல் கல்லூரியில் ஓணம் திருவிழா

கோவை ஆக:26
டாக்டர்.ஆர்.வி.கலை அறிவியல் கல்லூரியில் ஒற்றுமையையும், சகோதரத்துவத்தையும் வலியுறுத்தும் வகையில் ஓணம் திருவிழா வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது. இவ்விழாவை கல்லூரி முதல்வர் சி.என். ரூபா அவர்கள் தொடங்கி வைத்தார். அனைத்து மாணவ, மாணவிகளும் கல்லூரி வளாகத்தை வண்ணமயமாக அலங்கரித்து கேரள பாரம்பரிய உடை அணிந்து அத்தப்பூ கோலமிட்டு மேள தாளங்கள் முழங்க மாபலிச்சக்ரவர்த்தியின் வேடமிட்டு அனைவருக்கும் வரவேற்பளித்து நடனமாடி ஓணம் பண்டிகையை கொண்டாடினர். இவ்விழாவில் துணை முதல்வர்கள், துறைத்தலைவர்கள் மற்றும் பேராசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# தஞ்சாவூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் குரூப் 2 தேர்வுக் கான இலவச பயிற்சி வகுப்பு

## 27 ஆம் தேதி தொடங்குகிறது

தஞ்சாவூர் ஆகஸ்ட் 26
தஞ்சாவூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் குரூப் 2 தேர்வுக்கான இலவச பயிற்சி வகுப்பு வருகிற 27ஆம் தேதி தொடங்கு கிறது
தஞ்சை மாவட்ட கலெக்டர் ரேவதி விடுத்துள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது
தஞ்சாவூர் மாவட்ட வேலைவாய்ப் பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டு மையத்தில் இயங்கி வரும் தன்னார்வ பயிலும் வட்டம் மூலம் போட்டி தேர்வுகளுக்கானகட்டணமில்லா பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகிறது
இதில் தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த போட்டி தேர்வுக்கு தயாரா கும் மாணவர்கள் அதிக அளவு பயனடைந்து வருகிறார்கள். இந்தநிலை தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் குரூப் 2 முதல் நிலை தேர்வுக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இந்த தேர் வு நம்பர் 1ஆம் தேதி நடைபெறுகிற து. இதற்கு விண்ணப்பிக்க அடுத்த மாதம் செப்டம்பர் 9ஆம் தேதி கடைசி நாள் ஆகும் மொத்த இடங்கள் 821 இந்த தேர்வுக்கு தயாராகி வரும் போட்டித் தேர்வுகள் பயன்பெறும் வகையில் கட்டணமில்லா பயிற்சி வகுப்புதஞ்சாவூர்மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டு மையத்தில் வருகிற 27ஆம் தேதி வியாழக்கிழமை தொடங்க உள்ளது. இந்த பயிற்சி வகுப்பு திங்கள் முதல் வெள்ளி வரை காலை 10.30 மணி முதல் மதியம் 1.30 வரை நடைபெறுகிறது
இதில் கலந்து கொள்ள விருப்பம் உள்ளவர்கள் 2 பாஸ்போர்ட் புகைப் படம் ,ஆதார் அட்டை நகல் ஆகிய வற்றுடன்தஞ்சாவூர் மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டு மையத்தினை நேரில் தொடர்பு கொண்டு தொடர்பு கொள்ளலாம் .மேலும் விவரங்களு க்கு 04362237037என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



# தருமபுரியில் திரு முருகா கிருபானந்த வாரியார் சாமிகள் பிறந்தநாள் விழா

தருமபுரி ஆகஸ்ட் 26
தருமபுரி குமாரசாமிப்பேட்டை பாரிமுனை நண்பர்கள் மற்றும் வாரியார் அன்னதான அறக்கட்டளை சார்பில் திரு முருகா கிருபானந்த வாரியார் சாமிகளின் 120 வது பிறந்தநாள் விழா குமாரசாமிப்பேட்டை சிவசுப்பிரமணியசாமி கோவில் பின்புறம் உள்ள தட்சணாமூர்த்தி மடத் தெருவில் நடைபெற்றது. இவ் விழாவுக்கு அறக்கட்டளை தலைவர் ஆர். மோகன்குமார் தலைமை தாங்கினார். செயலாளர் கே. ஸ்ரீதர் வரவேற்றார். பொருளாளர் மணிவண்ணன், ஊர் பிரமுகர்கள் குமார், வேலாயுதம், மோகன், சதாசிவம், சண்முகம், டி.ஜி.மணி, அன்பு, மணிவண்ணன், செல்வமணி, அறக்கட்டளை நிர்வாகிகள் கணேஷ், சரவணன், நகராட்சிகவுன்சிலர் பாண்டியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவையொட்டி கிருபானந்த வாரியார் திரு உருவப்படத்திற்கு சிறப்பு வழிபாடுகள் நடத்தப்பட்டு மகாதீபாரதனை நடைபெற்றது. பின்னர் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் அவரது உருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர். தொடர்ந்து பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. தருமபுரி மாவட்ட செங்குந்த மகாஜன சங்க தலைவர் சந்தோஷ், சிவா அன்னதானம் வழங்கும் விழாவை தொடங்கி வைத்தார். இதில் இம்பா அமைப்பில் மாநில செயலாளர் சரவணன், நிர்வாகிகள் உதயபானு, தவமணி, சேகர், பாபு, சோமசுந்தரம், பழனிசாமி, பூங்குன்றம், கண்ணன், பசுபதி மற்றும் ஏராளமான பொது மக்கள் கலந்து கொண்டனர்.

# குமரியில் நீர் வளத்துறை கால்வாய்களை ஆக்கிரமித்து கட்டுமானங்கள் கட்டும் பேரூராட்சிகள் மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுப்பாரா?



நாகர்கோவில், ஆக.26
கன்னியாகுமரி மாவட்டத்தில் பெரும்பாலான நீர் நிலைகள் மற்றும் நீர்வழிப் பாதைகளை மக்கள் நலத் திட்டங்கள் என்ற பெயரில் மக்களை ஏமாற்றி மக்களின் குடிநீர் ஆதாரங்களையே அழித்து மக்களின் வாழ்விடங்களை பாலைவனமாக்கும் அவலங்களை பேரூராட்சி நிர்வாகங்கள் தொடர்ந்து நிறைவேற்றி வருகின்றன. இதற்கு பேரூராட்சிகளின் உதவி இயக்குனர் முதல் பேரூராட்சிகளின் உதவி செயற்பொறியாளர், மற்றும் பேரூராட்சி பொறியாளர்கள் மற்றும் பேரூராட்சி செயல் அலுவலர்கள் ஆகியோர் கூட்டு சேர்ந்து செயல்பட்டு வருவதாக புகார் எழுந்துள்ளது.

அந்த வரிசையில் தற்போது மார்த்தாண்டம் கிளை கால்வாய் செல்லும் வெள்ளிவிளாகம் அருகே மாலன் விளைசிஎஸ்ஐசர்ச்அருகில் விளவங்கோடு தாலுகா உண்ணாமலைகடை கிராமம் புல எண் 722/12 ல் மூன்றரை அடி அகலம் உள்ள கால்வாயை சுமார் 50 அடி தூரத்திற்கு ஒரு அடி அகலமாக சுருக்கி ஆக்கிரமித்து உள்ளதால் கால்வாய் நீர் அப்பகுதியில் சாலையில் புகுந்து அப்பகுதியில் உள்ள வீடுகள் மற்றும் விவசாய நிலங்களில் புகுந்து பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது.

மேலும் அதற்கு அப்பாற்பட்டு கால்வாய் தண்ணீர் செல்வதில் இடையூறு ஏற்பட்டு உள்ளதால் அதற்கு தீர்வு காண இயலாமல் பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் பெரும் இன்னலுக்கு ஆளாகி வருகின்றனர்.

நீர்வளத்துறை மேற்படி மார்த்தாண்டம் கிளை கால்வாயை தூர்வார லட்சங்களில் பணம் செலவு செய்தும் மேற்படி ஆக்கிரமிப்புகளை கண்டு கொள்ளாமல் அந்த கால்வாய் ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுக்காமல் மௌனம் காத்து வருவதால் அப்பகுதியில் நீர் வீணாகி வீடுகளுக்குள்ளும் விவசாய நிலங்களுக்குள்ளும் புகுந்து பாதிப்பை ஏற்படுத்தி வருவதோடு அதற்கு அப்பாற்பட்டு தண்ணீர் செல்ல இயலாமல் உள்ளதால் கால்வாயை தூர்வார லட்சங்களில் செலவு செய்த பணம் வீணாகி வருவதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளது.

குமரி மாவட்டத்தில் தொடர்ந்து பல்வேறு கால்வாய் பகுதிகளை மழை நீர் வடிகாலாக பயன்படுத்திய நிலையில் அது குறித்து குழித்துறை நீர்வளத்துறை அதிகாரிகளிடம் முறையிட்டும் இதுவரை அதற்கு தீர்வு காணப்படவில்லை என்பதுதான் வேடிக்கையாக உள்ளது.

நீர்வளத்துறை அதிகாரிகளின் பொறுப்பற்ற தன்மையால் நீர்வளத் துறைக்கு சொந்தமான இடங்களை அழித்து பொதுமக்களின் வாழ்விட பகுதியில் உள்ள நீர் ஆதாரத்தை முற்றிலும் முடக்கும் இழிச்செயலில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

ஆகவே மக்கள் பணத்தை வீணக்கும் வகையில் பேரூராட்சி பகுதிக்கு சொந்தமில்லாத இடங்களில் ஒப்பந்த பணிகள் என்ற பெயரில் நீர்வளத் துறையின் நீர் ஆதார பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளை கணக்கெடுத்து அந்தப் பணிகளுக்கு ஒப்புதல் வழங்கிய அதிகாரிகள் எஸ்டிமேட் எடுத்த பொறியாளர்கள் ஆகியோர் மீது மாவட்ட ஆட்சியர் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது.

## திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரியில்

# தமிழ்த்துறை வீரமாமுனிவர் தமிழ் மன்றம் சார்பில் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்ச்சி



திருப்பத்தூர்:ஆக:26,
திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர்தூய நெஞ்சக் கல்லூரியில் தமிழ்த்துறை வீரமாமுனிவர் தமிழ் மன்றம் சார்பில் சிறப்புச் சொற்பொழிவு நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் செயற்கை நுண்ணறிவு மற்றும் இயந்திரக் கற்றல் துறை மாணவன் யோகேஷ்குமார் அனைவரையும் வரவேற்று பேசினார்.

அருட்தந்தை முனைவர் தியோபில் ஆனந்த் ஆசியுரை வழங்கினார். தமிழ்த்துறைத் தலைவர் (சுழற்சி 2) முனைவர் ம.சரளாதேவி வாழ்த்துரை வழங்கினார். சிறப்பு விருந்தினர் கல்லூரியின் முன்னாள் மாணவரும், அரசு ஆடவர்கலைக் கல்லூரியின் முனைவர் பட்ட ஆய்வாளர் ரஜினி ' நாலும் இரண்டும் அன்றும் இன்றும் ' என்னும் தலைப்பில் சொற்பொழிவு ஆற்றினார். இந்நிகழ்ச்சியினை வீரமாமுனிவர் மன்றத் தலைவர் இரா.இராஜா, உதவிப் பேராசிரியர்கள் முனைவர் கோ.கமலா, முனைவர் ச.மணிமேகலை ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர். மேலும், நிகழ்ச்சியில் இருபால் பேராசிரியர்கள், மாணவ மாணவிகள் என பலரும் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியின் முடிவில் ஆங்கிலத் துறை மாணவன் சாவியோ ராகுல் ராஜ் நன்றியுரை வழங்கினார். நிகழ்ச்சியினை செயற்கை நுண்ணறிவு மற்றும் இயந்திரக்கற்றல்துறைமாணவி பிரிசில்லாநிகழச்சியினை தொகுத்து வழங்கினார்.

# கார்ஸ் 327"நிறுவனத்தின் மூலம் அரசு பள்ளி மாணவ, மாணவிகளின் விமானத்தில் அழைத்துச் செல்ல ஏற்பாடு



கோவை ஆக:26
கோவை மாவட்டம் ஏ ஜி புதூர் பகுதியில் ஓடை வனம் என்ற அமைப்பில் ஏராளமான கல்லூரி, பள்ளி மாணவ மாணவிகள் மற்றும் இளைஞர்கள் தங்களுடைய விடுமுறை நாட்களில் தங்களுடைய கிராமத்தை தூய்மையாக வைத்துக் கொள்ளும் போது தூய்மை பணிகளிலும் மரங்கள் வளர்ப்பிலும் கடந்த சில வருடங்களாக ஈடுபட்டு தங்களுடைய கிராமத்தை சோலைவனமாக மாற்றி வருகின்றனர்.

இவர்களது கிராமத்திற்கு அருகில் தான் கோவை பீளமேடு விமான நிலையம் இருப்பதால் அவ்வப்போது இவர்களை தாண்டி விமானங்களை இறங்கும்போது ஆவலோடு விமானங்களை தலைநிமிர்ந்து பார்ப்பார்கள், பல நாட்களாக இவர்களும் இந்த விமானத்தில் நாமும் எப்போது பறப்போம் என்ற ஏக்கமும் அவர்களுடையே இருந்து வந்துள்ளது. இதை தன்னைச் சார்ந்த நண்பர்களிடமும் கூறி வந்துள்ளனர். இந்த விஷயத்தை கேள்விப் பட்ட கோவை பட்டணம் பகுதியில் "கார்ஸ் 327" என்ற நிறுவனத்தை நடத்தி வரும் இளைஞர் விஷ்ணு வேணுகோபால் உடனடியாக அந்த மாணவ, மாணவிகளின் கனவை நினைவாக்கும் முயற்சியில் இறங்கியுள்ளார். அதன் பொருட்டு அரசு பள்ளி மாணவ மாணவிகள் 36 பேரை வருகின்ற 26 ஆம் தேதி கோவையிலிருந்து விமானம் மூலம் சென்னை அழைத்துச்சென்று முக்கியமான இடங்களை சுற்றி காண்பித்து விட்டு மீண்டும் அன்று மாலை சென்னையில் இருந்து கோவை அழைத்து வரசிறப்பு ஏற்பாடுகளை செய்துள்ளார். இதற்கு உண்டான அனைத்து செலவுகளையும் அவரது நிறுவனம் சார்பில் ஏற்றுக் கொண்டுள்ளார். இதனை கேள்விப்பட்ட அந்த மாணவ மாணவிகள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தங்களது வாழ்நாளில் எப்போது விமானத்தில் பறப்போம் என்ற அவர்களுடைய கனவை நினைவாக்கிய கார்ஸ் 327 நிறுவனர் விஷ்ணு வேணுகோபால் நன்றிகளை தெரிவித்துள்ளனர். அதேபோல ஏ ஜி புதூர் குரும்ப பாளையம் பொதுமக்களும் இவருடைய சமூக பணிகளுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர். 36 பள்ளி மாணவ, மாணவிகளுக்கு விமானடிக்கெட் வழங்கும் நிகழ்வு ஏஜி புதூர் ஓடை வனம் பகுதியில் அந்த அமைப்பை சார்ந்த பசுமை அ.க.புதூர்தங்கவேல், மரம் சண்முகம் மற்றும் நிர்வாகிகள் பெற்றுக் கொண்டனர். இந்த ஏற்பாடுகளை கார்ஸ் 327 நிறுவனத்தை சார்ந்த விஷ்ணு வேணுகோபால் மற்றும் மோகன் வேணுகோபால் ஆகியோர்செய்து இருந்தனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.